அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com
செவ்வாய்க்கிழமை 25.04.2023 supeedsam.com supeedsam@gmail.com

# வட, கிழக்கில் இன்று முடங்கும் சேவைகள்?

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராகவும், தமிழ் மக்களின் இன, மத, வாழிட அடையாளங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராகவும் வடகிழக்கு மாகாணங்கள் தழுவிய மாபெரும் ஹர்த்தால் இன்று 25 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

7 தமிழ் கட்சிகள் கூட்டாக விடுத்த இந்த ஹர்த்தால் அழைப்புக்கு வடகிழக்கு மாகாணங்களில் உள்ள பெருமளவு சிவில் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், மக்கள் அமைப்புக்கள், வியாபாரிகள், தொழிற்சங்கங்கள், தனியார் போக்குவரத்து துறையினர், பல்கலைகழக மாணவர்கள் என சகலரும் ஒத்துழைப்புக்களை வழங்கியிருக்கின்றனர்.

02 ஆம் பக்கத்தில்...

## ஹர்த்தால் தொடர்பில் சில பொது அமைப்புக்கள் தீர்மானம் இல்லை

வவுனியாவில் ஹர்த்தால் தொடர்பில் சில பொது அமைப்புக்கள் தீர்க்கமான முடிவினை அறிவிக்காமையில் மக்கள் குழப்பத்தில் உள்ளனர். புதிய பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல் மற்றும் பௌத்தமயமாக்கல் என்பவற்றுக்கு எதிராக இன்று (25.04) செவ்வாய்கிழமை வடக்கு – கிழக்கு பகுதியில் பூரண ஹர்த்தாலுக்கு 7 தமிழ் தேசியக் கட்சிகள் மற்றும் சில பொது அமைப்புக்கள் அழைப்பு விடுத்திருந்தன.

02 ஆம் பக்கத்தில்...

## ஹர்த்தாலுக்கு ஆதரவு கோரும் சாணக்கியன்



புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராகவும், வடக்கு – கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்ற சிங்கள – பௌத்த மயமாக்கலைக் கண்டித்தும் நாளை செவ்வாய்க்கிழமை வடக்கு – கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கக்கூடாது!

### அரசு மீறினால் போராட்டங்கள் வெடிக்கும்!




அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஆதரவு வழங்கக்கூடாதென யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் அழகராசா விஜயகுமார் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூட்டத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மாணவர் சமூகத்திற்கும் பாரதூரமானது எனவும் தொடர்ச்சியாக இதனை நடைமுறைப்படுத்த ஆட்சியாளர்கள் முன் வந்தால் வடகிழக்கு தழுவிய பீதியில் மாணவர்களின் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் யாழ் பல்கலைக்கழக

02 ஆம் பக்கத்தில்...

## கோடுங்கோல் ஆட்சியின் வலி வேதனைகளை உணர்ந்தவர்களாக போராட்டத்திற்கு கரம் கோடுப்பீர்!

முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் போராட்டத்திற்கு நாட்டு மக்களுடன் அனைத்து அமைப்புகளையும் பூரண ஒத்துழைப்பினை தந்துதவுமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று மட்டக்களப்பு ஊடக அமையத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்ந்தும் அவர்கள் குறிப்பிடுகையில்,

கடந்த காலத்தில் கொடுங்கோல் அரசாங்கத்தின் பயங்கரவாத சட்டம் காரணமாக பாதிக்கப்பட்ட இலங்கை வாழ்

02 ஆம் பக்கத்தில்...

## போராடினால் மட்டுமே தமிழர்களின் இருப்பை பாதுகாக்கமுடியும்



தமிழ் மக்கள் தமது இருப்பினை தக்கவைப்பதற்காக எல்லாவழிகளிலும் போராடவேண்டிய நிலைக்கு இன்றை காலச்சூழலில் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக தமிழிரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கைவிட வேண்டும்,

02 ஆம் பக்கத்தில்...

## அனுராதபுரம், போலன்னறுவை ஆகிய பிரதேசங்களில் சிங்களவர்கள் சென்று வழிபட முடியாது

வெடுக்குநாறி ஆதிசிவலிங்கத்தை மீள நிர்மாணிப்பதற்கான உத்தரவினை பிறப்பிப்பதற்கு பிறிதொரு தினத்தில் விண்ணப்பம் ஒன்றை செய்யவுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின்

02 ஆம் பக்கத்தில்...



## வெடுக்குநாறிமலை ஆலய வழிபாட்டை யாரும் தடுக்க முடியாது!

### நீதிமன்றம் அதிரடி உத்தரவு

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தின் வழிபாட்டுக்கும், பூசைகளிற்கும் எந்தவொரு அரச அதிகாரிகளும் தடைவிதிக்க முடியாது என வவுனியா மாவட்ட நீதிமன்றம் நேற்று (24) உத்தரவிட்டுள்ளது.

எனினும், உடைக்கப்பட்ட ஆலய விக்கிரகங்களை இப்பொழுது வைக்க முடியாது,

02 ஆம் பக்கத்தில்...

“சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”
aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma :34598
25605: cicero



MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா–வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Franzósisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# முன்னாள் மாநகரசபை உறுப்பினர் ராஜனின் வீடு தாக்குதல்!

## இன்றைய ஹர்த்தாலின் எதிரொலியா?; நீலாவணை போலீசில் முறையீடு .

( வி.ரி.சகாதேவராஜா)

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனின் வீடு நேற்று(24) நள்ளிரவு தாக்குதலுக்கு உள்ளானது .

கல்முனை பெரிய நீலாவணைப் பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டிற்கு ஒரு மணி அளவில் வந்த இனந்தெரியாத கோஷ்டினர் பிரதான வாயிலே உடைத்து உள்நுழைந்ததாக போலீசில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டு இருக்கின்றது.

பெரியநீலாவணை போலீசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

சந்திரசேகரன் ராஜன் இன்றைய வடக்கு கிழக்கு ஹர்த்தால் கடை அடைப்பு முன்னிட்டு நேற்றும் நேற்றுமுன்தினமும் கல்முனை பிராந்தியத்திலுள்ள கடைகளில் ஆதரவு தருமாறும் கடைகளை அடைக்குமாறும் கோரி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது .இதன் எதிரொலியாக இந்த தாக்குதல் நடந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

முன்னாள் உறுப்பினர் சந்திரசேகரன் ராஜனிடம் இதுபற்றி கேட்ட பொழுது .

நேற்று இரவு நானும் மனைவியும் எனது மகனும் ஆழ்ந்த நித்திரை தூக்கத்தில் இருந்த பொழுது திடீரென்று திடீர் திடீரென சத்தங்கள் கேட்டன .நேரத்தை பார்த்தேன் ஒரு மணி ஐந்து நிமிடமாக இருந்தது



.மெதுவாக எழுந்து மின்விசிறியை நிறுத்திவிட்டு வாயிலை யன்னல் வழியாக பார்த்தேன். வழமையாக எமது பிரதான வாயிலில் மின்குமிழ் எரிந்து கொண்டிருக்கும்.ஆனால் அத்தருணம் அது எரியவில்லை. ஆகவே விளங்கிவிட்டது எமது வீடுதான் தாக்குதலுக்கு இலக்காகுகின்றது என்று .அதனால் அச்சத்துடன் மகனின் வாயை பொத்திக் கொண்டு வீட்டுக்குள்ளே இருந்தேன். சுமார் பத்து நிமிடங்கள் எமது வீட்டுக்கு வெளியிலும் சிங்களத்தில் சிலர் கதைத்துக் கொண்டிருந்ததை ஓரளவுக்கு கேட்கக் கூடியதாக இருந்தது.

பத்து நிமிடத்திற்கு பிற்பாடு சத்தம் குறைந்ததும் நான் மாடிவுட்டு தொகுதியில் உள்ள எனது நண்பர்களிடம் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டதும் அவர்கள் எனது இடத்திற்கு வந்தார்கள். அதன் பிறகு நானும் வெளியில் வந்தேன். அப்பொழுதுதான் எனது கேட் உடைக்கப்பட்டு இருப்பது தெரியவந்தது. உடனே நீலாவணைப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தொலைபேசி எடுத்தேன் .அவர் அந்த வேளையில் எடுக்கவில்லை . காலையில் இதனை முறைப்பாடு செய்திருந்தேன். இலங்கை மனித உரிமை ஆணைக்கு மூவிடமும் எனது முறைப்பாட்டை சமர்ப்பிக்கிறேன் .

எது என்ன நடந்தாலும் இன்றைய கர்த்தால் கடையடைப்பில் மக்கள் பூரணமாக ஈடுபடுமாறு மக்களை அன்பாகக்கேட்டுக் கொள்கிறேன். என்றார்.

# ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்துறைக்கு மிகப்பெரும் ஆபத்து

(வாஸ் கூஞ்ஞ)

தற்போது இலங்கை அரசு முன்வைத்துள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் சட்டமாக்கப்பட்டால் ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்துறைக்கு மிகப்பெரும் ஆபத்து ஏற்படும்.

இதனால் ஊடகவியலாளர்கள் தங்களது கடமைகளை சுதந்திரமாக மேற்கொள்வது என்பது கேள்விக்குள்ளாகும்.

எனவே குறித்த சட்டமூலத்திற்கு எதிராக கிளிநொச்சி ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 29.04.2023 சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக எதிர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்க கிள்நொச்சி ஊடக அமையத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஊடக அமைப்பக்களின் ஆதரவினையும் இவ்அமைப்பு கோரி நிற்பதுடன் இதற்கு வலுச் சேர்க்கும்படியும் எதிர்பார்த்து நிற்பதாகத் தெரிவித்துள்ளனர்.

## ஹர்த்தாலுக்கு ஆதரவு கோரும் சாணக்கியன்

வடக்கு – கிழக்கில் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ள ஹர்த்தால் தொடர்பில் ஊடகங்களுக்கு இன்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதேவேளை, இன்றைய வடக்கு – கிழக்கு ஹர்த்தால் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கும் துண்டுப் பிரசுரங்களை மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சாணக்கியன் எம்.பி. வழங்கினார்.

## அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய

விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணையில் முன்னிலையாகிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக பூசை வழிபாடுகள் இடம்பெற்றமைக்கான புகைப்பட ஆதாரங்களை பொலிஸாரே நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தாக அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

தன்னால் முன்வைக்கப்படுகின்ற விண்ணப்பத்திற்கு பதில் அளிப்பதற்காக அரச சட்டத்தரணியின் உதவியை பொலிஸார் நாடியுள்ளதாகவும் அதற்காக பிறிதொரு தினத்தையும் கோரியிருந்ததாக சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பின் பிரகாரம் மத வழிபாடு என்பது எவராலும் மட்டுப்படுத்த முடியாத உரிமைகள்,மரத்தையோ, கல்லையோ வழிபடலாம் அதற்கு பூரண உரித்துள்ளது.

அந்த மரம் வனப்பிரதேசத்தில் இருப்பதால் வணங்க முடியாது என எவரும் கூறமுடியாது. ஒரு கல் தொல்லியலுக்குரியது என்பதற்காக அதனை வணங்க முடியாது என எவரும் கூற முடியாது.

அவ்வாறு சொல்வதாக இருந்தால் அனுராதபுரத்திலும், பொலன்நறுவையிலும் சென்று எவரும் வழிபட முடியாது.

இந்த விடயங்கள் இன்று நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் நீதவான் இடைக்கால உத்தரவை வழங்கியுள்ளார்.

அதாவது வெடுக்குநாறி பிரதேசத்திலே வணக்கங்களை நடத்துவதற்கு பக்தர்கள் செல்வதை எந்த அரச அதிகாரியும் தடுக்க கூடாது என்ற உத்தரவு கொடுக்கப்பட்டு பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு

மாணவர் ஒன்றிய தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஒரு மனிதன் சுதந்திரமாக ஜனநாயக பீதியாக தன்னுடைய கருத்தை தெரிவிப்பதற்கு எதிராக கடுமையாக இயற்றப்பட்ட சட்டமூலமாகவே இந்த சட்ட மூலம் காணப்படுகிறது.

மேலும் ஜனநாயக பீதியாக போராடுகின்ற மாணவர்கள் கைது செய்து இதன் மூலம் அச்சுறுத்தப்படுகின்றார்கள்.

இலங்கை நாடாளுமன்றத்தில் இந்த சட்ட மூலமானது ஒரு நியாயப்படுத்தப்பட்ட சட்டம் மூலமாக்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு ஆதரவு வழங்ககூடாது என்றும் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் தெரிவித்துள்ளார்.

## ஹர்த்தால் தொடர்பில் சில பொது அமைப்புக்கள்

இந்நிலையில் நேற்று (24.04) ஹர்த்தால் நடவடிக்கைக்கு ஆதரவு கோரி வவுனியாவில் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளில் வவுனியா மாவட்டத்தை உள்டக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் செல்வம் அடைக்கலநாதன், வினோதரராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகிய 3 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் துண்டு பிரசுரம் வழங்கும் நிகழ்வில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. அத்துடன் வவுனியா மாவட்ட வர்த்தக சங்கம், தனியார் பேரூந்து உரிமையாளர் சங்கம், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம், மொத்த வியாபாரிகள் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம் என எந்த அமைப்புடனும் அவர்கள் பேசவில்லை.

அவர்களது கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்திய சில முன்னாள் மாகாண சபை மற்றும் முன்னாள் உள்ளுராட்சி மன்ற உறுப்பினர்கள், வேட்பாளர்களே ஹர்த்தால் அழைப்பினை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், குறித்த ஹர்த்தாலுக்கு வவுனியா மாவட்ட தனியார் பேரூந்து உரிமையாளர் சங்கம், சிகையலங்கரிப்பாளர் சங்கம், பதிப்பாளர் கூட்டுறவுச் சங்கம் என்பன பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளதுடன், மொத்த விற்பனையாளர் சங்கம் (மரக்கறி), வர்த்தக சங்கம், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம் என்பன தமது முடிவிவை தெளிவாக அறிவிக்கவில்லை.

இது தொடர்பில் அவர்களிடம் கேட்ட போது, அவர்கள் அதற்கு தெளிவான பதிலை வழங்க மறுத்து விட்டனர். இந்நிலையில் நாளைய தினம் (25.05) வர்த்தக நிலையங்களில் வேலை செய்வோர், மரக்கறிகளை கொண்டு செல்வோர், விவசாயிகள், பொது மக்கள் எனப் பலரும் வர்த்தக நிலையங்கள் திறக்குமா?, திறக்காதா என்ற குழப்பத்தில் உள்ளனர்.

மாவட்ட மக்கள் பிரதிநிதிகளின் ஆளுமையற்ற நடவடிக்கையும், சில அமைப்புக்களின் தெளிவற்ற தன்மையும் மக்கள் மத்தியில் குழப்பைத்தை ஏற்படுத்தியுள்ளது.

# இந்து மக்களும் ஹர்த்தால் பூரண ஆதரவை வழங்க வேண்டும்

எதிர்வரும் 25.04.2023 அன்று வடக்கு கிழக்கிலே பூரண ஹர்த்தால் இடம்பெறவுள்ளது. இதன் தன்மையை உணர்ந்து அனைத்து இந்து மக்களும் இதற்குப் பூரண ஆதரவை வழங்க வேண்டும் என்று அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை இந்த வேண்டுகோளை முன் வைக்கின்றது.

எதிர்வரும் 25ம் திகதியன்று நடைபெறும் ஹர்த்தாலுக்கு அனைத்து இந்து தமிழ் மக்களும் தங்கள் பூரண ஆதரவை வழங்க வேண்டும். வர்த்தக நிலையங்கள் மூடப்படல் வேண்டும், போக்குவரத்துகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

இக்ஹர்த்தாலானது எமது நாட்டில் தற்போது கொண்டுவரப்படுகின்ற புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமானது எமது மக்களுக்கு இருக்கின்ற ஜனநாயக உரிமையை பறிக்கும் விதத்தில் மிகக் கொடூரமான சரத்துகளைக் கொண்டதாக இருக்கின்றது. அதிலிருந்து எமது மக்கள் பாதிக்கப்படாத வகையில் இருக்க வேண்டுமாக இருந்தால் அச்சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படுகின்ற போது அதனை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே அந்தச் சட்ட மூலத்தை நிறுத்துவதற்காக எம்மால் மேற்கொள்ளப்படுகின்ற ஆதரவாகவே இக்கர்த்தால் அமைகின்றது. அதேநேரத்தில் வடக்கு கிழக்கு பகுதிகளில் தொல்பொருள் என்ற வகையில் இந்துத் தமிழ் மக்களின் வாழிடங்கள் திட்டமிட்டு பௌத்த துறவிகளாலும், இராணுவத்தினாலும், அரசாங்கத்தினாலும் சுவீகரிக்கப்படுகின்றது. இவற்றை நாங்கள் தடுத்து நிறுத்த வேண்டும். வடக்கு கிழக்கு எங்கள் சொந்த மண் அதற்காகப் பல தியாகங்கள் நடைபெற்றன. அவ்வாறான தியாகங்களை நிலைப்படுத்த வேண்டுமாக இருந்தால் நாங்கள் எங்கள் மண்ணைப் பாதுகாக்க வேண்டும்.

வடக்கு கிழக்கிலே இந்த சிங்கள பேரினவாத அரசானது இராணுவத்தினரைப் பயன்படுத்தி இந்துத் தமிழ் மக்களின் வாழிடங்கள், பூர்வீக இந்து ஆலயங்களின் அமைவிடங்கள் உட்பட பல இடங்களைப் தொல்பொருள் என்ற பெயரில் அடையாளப் படுத்தி தங்களுக்குள் உட்படுத்துகின்றார்கள். இதனைத் தடுத்து நிறுத்தக் கொரியும் இந்த கர்த்தாக் அமைகின்றது.

இதேவளையில் மகாவலி அபிவிருத்தி, வனபரிபாலனம், வன வளம் என்ற ரீதியிலும் வடக்கு கிழக்கில் இருக்கின்ற காணிகளத் தங்கள் வசம் வைத்துக் கொண்டு எங்கள் மக்களின் இருப்பிடங்களையும் சுவீகரிக்கின்ற நிலைமையும் காணப்படுகின்றது.

இவற்றுக்கெல்லாம் எதிர்ப்புத் தெரிவித்து 25ம் திகதி இடம்பெறுகின்ற ஹர்த்தாலுக்கு எமது அனைத்து இந்துத் தமிழ் மக்களும் பூரண ஆதரவை வழங்குமாறு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை அன்புடன் வேண்டிக்கொள்கின்றது.

## வெடுக்குநாறிமலை ஆலய வழிபாட்டை யாரும் தடுக்க முடியாது!

அடுத்த தவணையில் அதைப்பற்றி ஆராயலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலய சிலை உடைப்பு தொடர்பில் இன்று நடந்த வழக்கு விசாரணையில் இந்த உத்தரவிடப்பட்டுள்ளது. ஆலய நிர்வாகம் சார்பில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகினார்.

தொல்லியத் திணைக்களம், வனவளத்திணைக்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இன்று வழக்கில் முன்னிலையாகாததால், அவர்கள் அடுத்த வழக்கில் முன்னிலையாகும் வரை, ஆலயத்துக்கு வாகனங்களில் செல்வதை தவிர்க்குமாறு பொலிசார் கேட்டுக் கொண்டனர்.

ஆலய நிர்வாகம் அதை ஏற்றுக்கொண்டது. தொல்லியல் திணைக்களத்தினர் இன்று நீதிமன்றில் முன்னிலையாகியிருக்காததால், உடைக்கப்பட்ட சிலையை மீள வைப்பது தொடர்பில் நீதிமன்று உத்தரவு பிறப்பிக்கவில்லை.

அடுத்த தவணையில் தொல்லியல்துறையின் கருத்தையும் அறிந்து, பொருத்தமான உத்தரவை பிறப்பிப்பதாக நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதற்கமைய, வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 27ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## போராடினால் மட்டுமே தமிழர்களின் இருப்பை பாதுகாக்கமுடியும்

வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் சிங்கள பௌத்த மயமாக்கலை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்னும் கோரிக்கைகளை முன்னிறுத்தி, நாளைய தினம் பொது முடக்கத்திற்கு சிறீதரன் அமைப்பு விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் தமது இருப்பினைத் தக்கவைப்பதற்காக எல்லாவழிகளிலும் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள இன்றைய காலச்சூழலில், தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பை மேலும் கேள்விக்கு உட்படுத்தும் வகையில் சிங்கள இனவாத அரசும் அதனுடன் இணைந்த அரச திணைக்களங்களும் திட்டமிட்டு மேற்கொள்ளும் இன, மத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டியதும், எமது மக்கள் தமது நியாயமான எதிர்ப்பைப் பதிவுசெய்வதற்கான கருத்துச் சுதந்திரத்தைக் கூட பறிக்கும் சரத்துக்களை உள்ளடக்கியுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதிர்க்க வேண்டியதும் காலத்தின் தேவையாக உள்ள நிலையில், இவ்விரு கோரிக்கைகளையும் பிரதானமாக முன்னிறுத்தி ஹர்த்தால் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே இன, மொழி, பிரதேச வேறுபாடுகளை களைந்து அனைவரும் இதற்கு ஆதரவளிக்க முன்வர வேண்டுமென்றும் பகிரங்கமாக அழைப்பு சிறிதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

## கொடுங்கோல் ஆட்சியின் வலி வேதனைகளை

மக்களிற்காக பயங்கரவாத தடை சட்டத்தினை எதிர்த்து வடக்கு கிழக்கு தழுவிய பீதியில் இன்று ( 25) முன்னெடுக்கவுள்ள போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவினை தருமாறு வேண்டி நிற்கின்றோம்.

இந்த பயங்கரவாத தடை சட்டத்தின் மூலம் வடக்கு கிழக்கு பகுதி வாழ் மக்கள் மாத்திரமன்றி முஸ்லீம் மக்களுடன் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவரும் பாதிக்கப்பட்டுள்ளமை என்பதே வரலாறாகும்.

கொடுங்கோல் ஆட்சியின் கீழ் குறிப்பாக வடக்கு ,கிழக்க்கில் பயங்கரவாத அந்த வலி வேதனைகளை உணர்ந்தவர்களாக அரசியல் காட்சிகள், வர்த்தக சங்கங்கள் மற்றும் அமைப்புகள் என ஒன்றிணைந்து மேற்கொள்ளவுள்ள போராட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து அமைப்புகளும் இந்த ஹர்த்தாலை முழுவதுமாக கடைபிடிக்கும் என நம்புகின்றோம்.

அத்துடன், தனியார் நிறுவனங்கள், அரச திணைக்களங்கள் , தனியார் மற்றும் அரச போக்குவரத்து , வர்த்த அமைப்புகள் என அனைத்து அமைப்புகளும் ஒன்றிணைந்து நிற்பதால் இது பூரணமாக அனுஷ்டிக்கப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

## வட, கிழக்கில் இன்று முடங்கும் சேவைகள்?

இந்த நிலையில் வடகிழக்கு மாகாணங்கள் முடக்கும் வகையில் இன்றைய தினம் ஹர்த்தால் அனுட்டிக்கப்படவுள்ளது.

– வடக்கு, கிழக்கு முழுவதுமுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் நாளை மூடப்பட்டு ஆதரவளிக்கப்படும் என வர்த்தகர் சங்கங்கள் அறிவித்துள்ளன.

– நாளை போக்குவரத்து சேவைகளும் இடம்பெறாது என தனியார் போக்குவரத்து சங்கங்கள் அறிவித்துள்ளன.

– வடமாகாணம் முழுவதும் நாளை தனியார் பேருந்து சேவை இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்திலும் இதே நிலைமையே காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

– இன்றுகல்விச்சேவைகளும் முடங்கும் என ஆசிரியர் சங்கங்கள் அறிவித்துள்ளன. வடக்கு கிழக்கு முழுவதும் நாளை பாடாசலை, தனியார் கல்வி நிலையங்களில் கற்பித்தல் செயற்பாடு முடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெற்றோர் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பி வீணாண அசௌகரியங்களை சந்திக்காமலிருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

– இன்று வடக்கில் சந்தை வியாபாரிகள் வர்த்தகத்தில் ஈடுபட மாட்டார்கள். இது தொடர்பில் அந்தந்த மாவட்ட சந்தை வியாபாரிகள் சங்கத்தினர் ஏற்கெனவே பகிரங்க அறிவித்தல் விடுத்துள்ளனர்.

கிழக்கில் பகிரங்க அறிவித்தல் ஏதுவும் விடுக்கப்படாவிட்டாலும், நாளை சந்தைகளை மூடுவதென அனைத்து பிரதான நகரங்களிலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

– இன்று சலூன்களும் திறக்காது. வடமாகாண அழகக சங்கங்களின் சமாசத்தின் தலைவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், நாளைய போராட்டத்தை வெற்றியடைய செய்ய, அழகக சங்கங்கள் மூடப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கிலுள்ள சலூன்களும் நாளை மூடப்பட்டிருக்கும்.

–இன்றைய நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதில்லையென பல சட்டத்தரணிகள் அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

– பல்வேறு மத அமைப்புக்களும் போராட்டத்துக்கு ஆதரவளித்துள்ளன. திருகோணமலை தென்கயிலை ஆதீனத்தின் தவத்திரு அகத்தியர் அடிகளார், யாழ் மெய்கண்டார் ஆதீனத்தின் தவத்திரு உமாபதிசிவம் அடிகளார், இந்து சமய பேரவையின் தலைவர் ஈசான சிவசக்திகிபீவன் ஆகியோரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

– இன்றைய போராட்டத்திற்கு கடற்றொழிலாளர் சங்கங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

– வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிவிப்பில், நாளை வடமாகாண தனியார் ஊழியர்கள் பணிகளுக்கு செல்ல வேண்டாமென அறிவித்துள்ளது.

– இன்றைய கதவடைப்புக்கு முஸ்லிம் தரப்பும் ஆதரவளித்துள்ளது. மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலுள்ள பல பள்ளிவாசல்கள், வர்த்த சமூகங்கள் போராட்டத்தை ஆதரித்துள்ளன.

# பயங்கரவாத புதிய சட்டத்தால் தமிழ் மக்கள் மேன்மலும் பல கஷ்டங்களை எதிர்கோள்ள வேண்டிய நிலைமை ஏற்படும்

(ரக்ஸனா)

இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் வடகிழக்கில் வர்கின்ற தமிழ் மக்கள் மென்மலும் பல கஷ்ற்றங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும். தொலைபேசி, இணையத்தளங்களை முடக்குதல், தனி நபர்களைக் கைது செய்தல் போன்றனவெல்லாம் அதில் இறுக்கமாக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு மாத்திரமின்றி இது முஸ்லிம், மற்றும் சிங்கள மக்களும் இதில்; பாதிக்கப்படுவார்கள்.

எதிர்வரும் 25 ஆம் திகதி பயங்கரவாத எதிப்புச் சட்டம் ஒன்றை புதிதாக அரசாங்கம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரவுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக 25 ஆம் திகதி வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களும். தங்களது வர்த்தக நிலையங்களை மூடி இந்த சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என ஜனநாயக் போராளிகள் கட்சியின் உப தலைவர் நா.நகுலேஸ் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை (23) மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி நகர் பகுதியில் இவ்விடையம் தொடர்பிலான துண்டுப் பிரசுரங்களை மக்களுக்கு வினியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போ;து அவர் மேலும் தெரிவிக்கையில்




ஏற்கனவே இலங்கையில் நடைமுறையிலிருக்கின்ற பயங்கரவாத சட்டத்திற்கு மாற்றீடாக இலங்கை அரசாங்கம் புதிய சட்டத்தைக் கொண்ட வருகின்றது. இது தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத சட்டத்தை விடவும் மிகவும் இறுக்கமான சட்டமாகக் காணப்படுகின்றது. புதிய சட்டத்தில் இராணுவம், மற்றும் பொலிசாருக்கு முழு அதிகாரங்கள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் வடகிழக்கில் வர்கின்ற தமிழ் மக்கள் மென்மலும் பல கஷ்ற்றங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும்.

தொலைபேசி, இணையத்தளங்களை முடக்குதல், தனி நபர்களைக் கைது செய்தல் போன்றனவெல்லாம் அதில் இறுக்கமாக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு மாத்திரமின்றி இது முஸ்லிம், மற்றும் சிங்கள மக்களும் இதில்; பாதிக்கப்படுவார்கள்.

இவ்வாறான சட்டங்களைப் பயன்படுத்தியே தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் பௌத்த மயமாக்கல்களையும் மேற்கொண்டு வருகின்றார்கள். இதனை தமிழ் மக்களாகிய நாம் எதிர்க்க முடியாத நிலையில் அரசு இதனைக் கொண்டு வருகிறது.

எனவே இச்சட்டம் நடைமுறையில் வருவதற்கு அனைத்து இன மக்களும் ஆதரிக்கக் கூடாது. இதற்காகவேண்டி எதிர்வரும் 25 ஆம் திகதி அனைவரும் தமது வர்த்தக நிலையங்களை மூடி கர்த்தால் அனுஸ்ட்டித்து தமது எதிர்ப்புக்களை அரசுக்கு காட்டுமாறு வேண்டுகின்றோம். என அவர் இதன்போது தெரிவித்தார்.

இதன்போது களுவாஞ்சிகுடி நகர் பகுதியிலுள்ள அனைத்து வர்த்தக் நிலையங்கள், மற்றும், பிரயாணிகளுக்கும் இது தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் அவர்களார் வினியோகிக்கப்பட்டன.

# நான்கு வயதுச்சிறுமி கிரண்யாஸ்ரீ உலகசாதனை!




( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனைப் பிராந்தியத்தில் உள்ள மிகவும் பின்தங்கிய தனிமைப் படுத்தப்பட்டுள்ள துரைவந்திமேடு எனும் குக்கிராமத்தைச் சேர்ந்த ஜனாசுகிர்தன் கிரண்யாஸ்ரீ எனும் நான்கு வயதுசிறுமி மாபெரும் இரண்டு உலக சாதனைகளைப் படைத்துள்ளார்.

இவர் தனது இரண்டு கைகளாலும் அ-ஙூ வரை குறுகிய நேரத்தில் எழுதி உலக சாதனையை படைத்துள்ளார்.

அவர் 2.38 நிமிடங்களில் இரு கரங்களினாலும் அ - ஙூ வரை எழுதி இச் சாதனையை படைத்துள்ளார்.

அவரின் சாதனையை அவரே முறியடித்து 2 உலக சாதனைகளை படைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

செல்வி. கிரண்யாஸ்ரீ. முதலாவது சாதனை அ-ஙூ =3.30 நிமிடங்களில் நிகழ்த்தியிருந்தார். தற்போது இரண்டாவது சாதனைஅ-ஙூ=2.38 நிமிடங்களில் நிகழ்த்தியுள்ளார்ர்

இவை இந்தியாவை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இரண்டு உலக சாதனை நிறுவனங்கள் மூலம் நிகழ்த்தப்பட்டது . அதற்கான




சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குடும்பத்தில் ஒரே மகளான இவரின் தந்தை கலைஞராவார். தாய் ஒரு தாதிய உத்தியோகத்தராவார்.

அவரின் தந்தை உலகில் மிகச் சிறிய சிவலிங்கத்தை மரத்தில் செதுக்கி உலக சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் நாட்டிற்கு நன்மை தருமா?

(ஹஸ்பர்)

நீதி அமைச்சரால் முன் மொழியப்பட இருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நாட்டிற்கு நன்மை தருமா என திருகோணமலை மாவட்ட அனைத்து பள்ளிவாயல்களின் சம்மேளன செயலாளர் எம்.எம்.மஹ்தி கேள்வி எழுப்பி உள்ளார்.

நேற்று (24) அவர் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

நாட்டிற்கான சட்டம் என்பது அனைத்து இன மக்களுக்கும் சமமாக பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர அது சிறுபான்மை சமூகத்தையும் எதிர் கட்சி அரசியல் தரப்பினரையும் அடக்கி, நசுக்குகின்ற தன்மை




கொண்டதாக இருக்கக் கூடாது.

கடந்த காலங்களிலே முஸ்லிம், தமிழ் சமூகமும் அரசியல் எதிரிகளும், சிறுபான்மை தலைமைகளும் பயங்கரவாத தடை சட்டம் என்ற ஒன்றால் அநியாயமாக பழி வாங்கப்பட்டார்கள்.

தற்போது கொண்டு வரப்பட இருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்பு சட்டமும் அவ்வாறான தன்மைகளை கொண்டிருக்கக் கூடாது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கொண்டு வருவதற்கு முன்னர் ஊழல் எதிர்ப்பு சட்டத்தை கொண்டு வந்து கொள்ளையடிக்கப் பட்ட நாட்டின் தேசிய சொத்துக்களை தேசிய உடமைகளாக்குவதோடு ஊழல்வாதிகளை தண்டிக்கவும் வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் மும்மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# தேசிய மட்ட போட்டியில் 05 வெற்றிகளை பெற்று சாதித்தது கல்முனை கல்வி வலயம்!

தேசிய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டி முடிவுகள் (2022) இன் அடிப்படையில் இம்முறையும் தேசிய ரீதியில் கல்முனை கல்வி வலயம் சார்பாக போட்டியிட்ட 05 மாணவர்களும் வெற்றி பெற்றுள்ளதுடன் 05 பதக்கங்களும் சான்றிதழ்களும் கிடைத்துள்ளன.

கல்முனை கல்வி வலய பிரிவிலிருந்து இப்போட்டியில் கலந்துகொண்ட மாவடிப்பள்ளி கமு/கமு/ அல்- அஸ்ரப் மகா வித்தியாலய மாணவன் (தரம் 10) எம்.எஸ். ஆகிப் அஹமட் முதலாமிடத்தையும், மருதமுனை கமு/கமு/ அல்-ஹம்ரா வித்தியாலய மாணவன் (தரம் 11) எஸ். அபாப் முதலாமிடத்தையும், கமு/கமு/ஆர்.கே.எம். பெண்கள் கல்லூரி மாணவி (தரம் 11) டீ. கஜினி இரண்டாம் இடத்தையும், கல்முனை கமு/கமு/மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி



(உயர்தரம்) ஏ.ஆர். பாத்திமா ஹுதா இரண்டாம் இடத்தையும், மருதமுனை கமு/கமு/ அல்- ஹம்ரா வித்தியாலய மாணவி (தரம் 10) ஏ.எஸ். ஹயானி நான்காம் இடத்தையும் பெற்று பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இவ் வெற்றி குறித்து கருத்து வெளியிட்ட கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், முழுமையாக தம்மை அர்ப்பணித்து பங்களித்த வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோகர்கள், இணைப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் வலயக்; கல்வி அலுவலகம் சார்பாக தனது நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

கல்முனை கல்வி மாவட்டத்தில் இருந்து போட்டியில் கலந்து கொண்டவர்களில் கல்முனை கல்வி வலயம் 05 இடங்களையும், சம்மாந்துறை கல்வி வலயம் 01 இடத்தினையும், அக்கரைப்பற்று கல்வி வலயம் ஒரு இடத்தினையும் தேசிய ரீதியாக சாதித்து தனதாக்கி கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அட்டப்பள்ளத்தை அதிரடியாக அரிக்கும் ஆழி!



( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரிவுக் குட்பட்ட அட்டப்பள்ளம் கடற்கரைப் பிரதேசம் மிகவும் மோசமாக கடல் அரிப்புக்கு உள்ளாக்கப் பட்டு வருகிறது.

கடந்த சில நாட்களாக கடலுக்கு அருகே உள்ள தென்னை மரங்களை காவு கொண்டும் கட்டிடங்களை உடைத்தும் சேதம் விளைவித்து வருகிறது. நிறைய தென்னை மரங்களை உள்வாங்கிய கடல் அருகிலுள்ள மீனவர் கட்டடம் ,கிணறு என்பவற்றையும் உள்வாங்கி வருகிறது என ஆலய தலைவர் த.கோபாலன் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சின்ன ஊறனி மேதடிஸ்த திருச்சபை வாலிபர் ஐக்கியத்தினால் இரத்ததானம்

(வாஸ் கூஞ்ஞ)

கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பு தினத்தை முன்னிட்டு 'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்' என்ற சிந்தனையில் மட்டக்களப்பு சின்ன ஊறனி மெதடிஸ்த திருச்சபை வாலிபர் ஐக்கியத்தினால் வருடாந்த இரத்ததான முகாம். மெதடிஸ்த ஆலயப் பகுதியில் இடம்பெற்றது.

இவ் இரத்ததான நிகழ்வில் இப்பகுதி மெதடிஸ்த திருச்சபை அருட்பணி கந்தையா ஜெகதாஸ் அடிகளார் உட்பட 41 இரத்த தானம் கொடையாளிகள் இரத்தம் வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.




Japan Pacific
marketing pvt ltd cycle
உதிரிபாகங்கள்,
cycle உதிரிபாகங்கள்,
முழுமையான cycle தொகையாக
விற்பனைக்கு உண்டு .
ஓட்டமாவடி,
வாழைச்சேனை
தொடர்புகளுக்கு
0777197004

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிரான போராட்டத்திற்கு மன்னார் மாவட்ட மக்கள் ஆதரவு வழங்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மன்னார் கட்சி முக்கியஸ்தர்கள் அழைப்பு

**(வாஸ் கூஞ்ஞ)**

இலங்கை அரசாங்கத்தினால் புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பச் சட்டத்திற்கு தமிழ் மக்கள் மத்தியில் அச்சமும் பாரிய எதிர்ப்பும் கிளம்பியிருக்கும் இந்த நேரத்தில் இந்த பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை இல்லாது செய்வதற்காக எதிர்வரும் 25ம் திகதி வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் முழு அடைப்பு போராட்டத்திற்கு மன்னார் மாவட்ட மக்கள் அனைவரும் ஆதரவு வழங்குமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது

இந்த விடயம் தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் இணைந்து மன்னார் ரெலோ அலுவலகத்தில் ஞாயிற்றுக் கிழமை (23) நடைபெற்ற ஊடக சந்திப்பில் மேற்படி கருத்தினை தெரிவித்தார்கள்

இது தொடர்பாக அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கும் போது; இன்றைய ஊடகவியலாளர் சந்திப்பை நடாத்துவதற்கு முக்கிய காரணம் இலங்கை அரசாங்கமானது எமது மக்களுக்கு எதிராக பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் ஒன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி ஏற்கனவே அடக்குமுறைக்கு உள்ளாக்கி இருக்கின்ற எமது மக்களை மீண்டும் மீண்டும் அடக்கி ஆழ்வதற்கான ஒரு புதிய சட்டத்தை உருவாக்குகின்றது

இதற்கு எதிராக நாங்கள் அனைவரும் கிளர்ந்து எழுந்து இந்த சட்டத்தை இந்த நாட்டிலிருந்து துடைத்து எடுப்பதற்கான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்ள வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கின்றோம்

இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினூடாக அரசாங்கத்துக்கு எதிராக சமூக ஊடகங்களில் சிறிய கருத்தை பதிவிட்டாலே அவர்களை கைது செய்து சிறைப்படுத்துவதற்கான அதிகாரம் இந்த ஆயுதப் படைகளுக்கு வழங்கப்படுகின்றது.

ஏற்கனவே இந்த ஆயுதப்படைகளுக்கு இலங்கையில் உள்ள பயங்கரவாத தடுப்பு சட்டம் அதே போன்று அவசர கால தடைச் சட்டம் ஊடாக பல அடக்குமுறை அதிகாரங்களை வழங்கி இருக்கிறது. உதாரணத்திற்கு எமது கலாச்சார விழுமியங்களை அழிப்பதற்கான அதிகாரம் எமது நிலங்களை கைப்பற்றுவதற்கான அதிகாரம் மற்றும் கேள்வி கணக்கின்றி எமது இளைஞர்கள் யுவதிகளை சிறைப்படுத்துவதற்கான அதிகாரம் ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதற்கான அதிகாரம் என்று பல அதிகாரங்களை வழங்கி இந்த நாடு எமது மக்களை அடக்கி ஆள்கிறது

மீண்டும் மீண்டும் எமது மக்களை ஒரு திறந்த வெளி சிறைச்சாலைக்குள் வைப்பதற்கான புதிய சட்டத்தை நாட்டிலே இந்த அரசாங்கம் உருவாக்குகின்றது.

எனவே இந்த தருணத்திலே நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து இந்தச் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை இந்த நாட்டில் கொண்டு வராத வகையில் போராட வேண்டிய கட்டாயம் இருக்கிறது

இந்த சட்டமானது தமிழர்களுக்கு மட்டும் பாதிப்பு இல்லை முஸ்லிம் மற்றும் சிங்கள இளைஞர் யுவதிகளுக்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் எனவே இந்த விடயத்தில் முஸ்லிம் சிங்கள் மக்கள் பிரதிநிதிகளாக உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர் வரும் 25ம் திகதி பாராளுமன்றத்தில் இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கட்டாயம் எதிர்க்க வேண்டும் என்பதுடன் அதே போன்று எதிர்வரும் 25ஆம் தேதி வடக்கு கிழக்கு தழுவிய அனைத்து மாவட்டங்களிலும் முழு அடைப்பு போராட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

அன்றை தருணம் வர்த்தக நிலையங்களை மூடி அரச அரச சார்பற்ற நிறுவணங்கள் முச்சக்கர வண்டிகள் அரச தனியார் பேருந்துகள் இயங்காமல் நிறுத்தி போராட்டத்திற்கு வலுச் சேர்ப்பதோடு இளைஞர் யுவதிகள் பல்கலைக்கழக மாணவர்கள் மனித நேயச் செயற்பாட்டாளர்கள் என்று பலரும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு அரசாங்கத்திற்கு பாரிய எதிர்ப்பினை காட்டுமாறு கேட்டுக் கொண்டனர்.

இந்த ஊடக சந்திப்பில் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சி சார்பாக கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும்இ பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளருமான டானியல் வசந்இ ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) கட்சி சார்பாக கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும்இமன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.ஆர்.குமரேஸ் இ ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) கட்சி சார்பாக கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் அ.ஜேம்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கல்முனையில் கோழியிறைச்சி விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை

**(செயிட் அஸ்லம்)**



கல்முனை மாநகர சபைப் பிரதேசங்களில் கோழி இறைச்சியின் விலையை கட்டுப்படுத்துவது தொடர்பாக மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, கோழி இறைச்சி வியாபாரிகளுடன் விஷேட கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார்.

கல்முனை மாநகர பிரதேசங்களில் 01 கிலோ கிராம் புரொய்லர் கோழி இறைச்சியானது 1600 வரை அதிகரித்த விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளைத் தொடர்ந்தே கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கோழி இறைச்சிக் கடைகளின் உரிமையாளர்கள் செவ்வாய்க்கிழமை (18) மாலை, மாநகர சபைக்கு அழைக்கப்பட்டு, விலைக் கட்டுப்பாட்டுக்கான சாதக நிலைமை குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டிருக்கிறது.

இக்கலந்துரையாடலில் கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், கணக்காளர் கே.எம்.றியாஸ், பொறியியலாளர் ஏ.ஜே.ஹலீம் ஜௌஸி, வருமான பரிசோதகர்களான ஏ.ஜே.சமீம், எம்.சலீம், எம்.எஸ்.எம்.உபைத், எம்.ரி.சப்னம் சாஜிதா, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.ஏ.அஹத் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது நோன்புப் பெருநாளை முன்னிட்டு நுகர்வோரின் நலனைக் கருத்தில் கொண்டு, சாதாரண மக்களும் கொள்வனவு செய்யும் வகையில் கோழி இறையிச்சியின் விலையை முடியுமான வரை குறைத்து விற்பதற்கு வியாபாரிகள் முன்வர வேண்டுமென ஆணையாளர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.


தற்போது கோழி உற்பத்திக்கான செலவுகள் அதிகரித்திருப்பதால், உற்பத்தி நிறுவனங்களினால் கூடிய விலைக்கே தமக்கு கோழிகள் விநியோகிக்கப்படுவதாகவும் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கேள்வி நிரம்பல் காரணமாக சடுதியாக அதிகரித்த கோழி இறைச்சியின் விலை அடுத்த சில தினங்களில் சிறிதளவு குறையும் வாய்ப்பு இருப்பதாகவும் வியாபாரிகள் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தனர்.

எவ்வாறாயினும், கோழி உற்பத்தி நிறுவனங்களின் தற்போதைய சந்தை விலைக்கேற்ப கொள்ளை இலாபமின்றி நியாய விலையில் கோழியிறைச்சியை விற்பதற்கும் அவ்வப்போது சந்தை விலை குறைகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் நுகர்வோருக்கு அவற்றின் பயன்களை பெற்றுக் கொடுக்கும் வகையில் விலைக்குறைப்பு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை, அனைத்து கோழி இறைச்சிக் கடைகளிலும் கண்டிப்பாக சுத்தம், சுகாதாரம் பேணப்பட வேண்டும் எனவும் கழிவுகள் யாவும் முறையாக சேகரிக்கப்பட்டு, மாநகர சபையின் பிரத்தியேக கழிவகற்றல் வாகனத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் இதன்போது அறிவுறுத்தப்பட்டது.

கோழியிறைச்சியின் விலை, தரம், சுத்தம், சுகாதாரம், நிறுவை மற்றும் கழிவகற்றல் முகாமைத்துவம் போன்ற விடயங்களில் கல்முனை மாநகர சபை நிர்வாகம் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்படும் என்று மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி வலியுறுத்திக் கூறினார்.

# ஆசிரியர் கவிஞர் சுஜி பொற்செல்வியின் பனி விழும் பொழுதுகள் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு



**(ந.குகதர்சன்)**

வாழைச்சேனை பேத்தாழை பொது நூலகம் மற்றும் விபுலானந்தர் கலை இலக்கிய வாசகர் மன்றம் இணைந்து ஆசிரியர் கவிஞர் சுஜி பொற்செல்வியின் 'பனி விழும் பொழுதுகள்' - கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா பேத்தாழை பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று மாலை இடம் பெற்றது.

பேத்தாழை பொது நூலக பொறுப்பாளர் ம.பிரகாஷ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழகம் ஓய்வுநிலைப் பேராசிரியர் செ.யோகராசா, கோறளைப்பற்று பிரதேச சபை செயலாளர் ச.நவநீதன், மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவியாணையாளர் அலுவலகம் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜனாப்.அ.ஹாரூன், ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் த.தர்மபாலன், வாழைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் மற்றும் பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது நூல் ஆசிரியர் கவிஞர் சுஜி பொற்செல்வியின் தாயாரான திருமதி.சிவபதி முருகையாவினால் முதல் பிரதி கிழக்குப் பல்கலைக்கழகம் ஓய்வுநிலைப் பேராசிரியர் செ.யோகராசாவிற்கு வழங்கி வைக்கப்பட்டதுடன், ஏனைய பிரதிகள் அதிதிகளுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டது.

நூல் நயவுரையினை கிழக்குப் பல்கலைக்கழகம் ஓய்வுநிலைப் பேராசிரியர் செ.யோகராசா நிகழ்த்தினார்.

இங்கு நூல் ஆசிரியர் கவிஞர் சுஜி பொற்செல்வியின்

பிரணவா இசை நடனக் கலைக் கல்லூரி மாணவர்களின் நடனம் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் சுவாமி விபுலானந்தரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து வைக்கப்பட்டது.

# முதல் தடவையாக சாய்ந்தமருதில் தமிழ் சிங்கள புத்தாண்டு மற்றும் ரமழான் விளையாட்டு நிகழ்வுகள்!






**(நூருள் ஹுதா உமர்)**

சாய்ந்தமருதின் வரலாற்றில் முதல் தடவையாக தமிழ் சிங்கள புத்தாண்டு மற்றும் ரமழான் விளையாட்டு நிகழ்வுகள் சாய்ந்தமருது பொலிஸ் நிலையம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு குழு ஆகியவற்றின் ஏற்பாட்டில் 2023.04.23 ஆம் திகதி பௌசி விளையாட்டு மைதானத்தில் மிகக் கோலாகலமாக இடம்பெற்றது.

பாரம்பரிய புதுவருட விளையாட்டுக்கள் மற்றும் நடன நிகழ்வுகள் என களைகட்டியிருந்த நிகழ்வு, சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுடீன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜயந்த ரத்னாயக்க கலந்து கொண்டு வெற்றியாளர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்ததுடன்; இலங்கையில் தமிழ் சிங்கள புத்தாண்டு மற்றும் ரமழான் விளையாட்டு நிகழ்வுகள்; ஒரே காலப்பகுதியில் ஒரே குடையின் கீழ் இடம்பெறுவது இனங்களுக்கிடையே அன்னியோன்யத்தை ஏற்ப்படுத்தும் என்று தெரிவித்தார்.

கௌரவ அதிதிகள் வரிசையில் கல்முனை பொலிஸ் பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.வுட்டிக்க மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் ஆகியோர் கலந்து கொண்டதுடன் விஷேட அதிதியாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பொறியலாளர் ஏ.எல்.எம். பாறூக் கலந்து சிறப்பித்ததுடன் பிரதேச முக்கியஸ்தர்கள் விளையாட்டு வீரர்கள் சிறுவர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# புனிதமான எமது தொழிலை அரசாங்கம் புதினமாகப் பார்க்கின்றது




(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள்மடம் - அம்பிளாந்துறை ஓடத்துறையில் சேவையிலீடுபடும் படகுப்பததையில் கட்டணம் செலுத்தி தாம் பயணிக்க முடியாது என தெரிவித்ததையடுத்து திங்கட்கிழமை(17.02.2023) குறித்த பாதைப்போக்குவரத்து சுமார் 3 மணித்தியாலங்கள் குருக்கள்மடம் துறையில் தடைப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. பாசாலையின் புதிய தவணைக்கான ஆர்பநாளான திங்கட்கிழமை குறித்த படகுப் பாதை ஊடாக போக்குவரத்துச் செய்யும் அதிகளவு அதிபர், ஆசிரியர்களும், ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற உத்தியோகஸ்த்தர்களும், காலை 7 மணி பாதை படுவாங்கரைப் பகுதிக்குப் புறப்படும் நேரத்திற்கு வழக்கமாகச் செல்வது போன்று குருக்கள்மடம் குறைக்குச் செய்யுள்ளனர். வழக்கம்போல் அனைவரும் அற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாதையில் ஏறியுள்ளனர். அங்கிருந்த வீதி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகஸ்த்தர்கள் பற்றுச் சீட்டுக்களைக் கொடுத்து கட்டணம் செலுத்துமாறு தெரிவித்ததையடுத்து அங்கு குழப்ப நிலமை ஏற்பட்டுள்ளது.

தாம் இதுவரைகாலமும் இப்படகுப் பாதையூடாக எதுவித கட்டணங்களுமின்றியே பயணம் செய்து அதிகஷ்ற்றப் பிரதேசங்களுக்குச் மிகவும் தொலை தூரம் சென்று மாணவர்களுக்கு கல்வி புகட்டி வருகின்றோம் திடீரென எம்மிடம் நிதி வசூலிப்பது என்பதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. என தெரிவித்ததையடுத்து. குறித்த பாதைப் போக்குவரத்து சேவையிலீடுபடாமல் காலை 9 மணிவரையில் தடைப்பட்டிருந்தது. பின்னர் அங்கிருந்த அரச உத்த்தியோகஸ்த்தர்கள் தம்மால் கட்டணம் செலுத்தி இப்பாதையில் பணயம் செய்ய முடியாது என தெரிவித்து கடமைக்குச் செல்லாமல் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

10 வருடங்களைக் கடந்தும் மிக நீண்ட தூரம் பணயம் செய்து அதி கஷ்ற்றப்பாடலை மாணவர்களுக்கு நாம் கல்வி புகட்டி வருகின்றோம். தற்போதைய வாழ்க்கைச் செலவுகளுக்கு மத்தியில, எமக்கு அரசாங்கத்தால் மாதாந்தம் வழங்கப்படும் வேதனமே போதாது. எமது புனிதமான தொழிலை

## ஆசிரியர்கள் கவலை

அரசாங்கம் புதினமாகப் பார்ப்பது எமக்கு கவலையளிக்கின்றது. எனவே இதுவரை காலமும் நடைமுறையிலிருந்தது போல் எதுவித கட்டணங்களுமின்றி நாம் பயணம் செய்து எமது சேவையைத் தொடர்வதற்கு சம்மந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும்.

சுமார் 5 வருடங்கள் அதி கஷ்ற்றப் பிரதேசங்களில் கடமையாற்றினால் நாங்கள் அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல முடியும். ஆனாலும் இற்றைவலையில் அவ்வாறு இடமாற்றம் பெறாமல் 10 வருடங்கள் கழிந்த நிலையிலும் அப்பகுதி மாணவர்களின் நலன்கருதி இதுவரையில் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காமல் சேவை செய்து வருகின்றோம். இந்நிலையில் நாம் பயணிக்கும் படகுப் பாதைக்கும் கட்டணம் அறவீடு செய்யதால் நாம் அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச்செல்ல நேரிடும் இது தொடரிபில் எமது உயர் அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளோம் என இதன்போது ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

# மாகாண சபையில் நியதிச் சட்டங்களை உருவாக்காததன் விளைவை இன்று உணர்கிறார்கள்

(த.சுபேசன்)

வடக்கு மாகாணசபையில் நியதிச் சட்டங்களை உருவாக்காததன் விளைவினை இன்று அவர்களே உணர்ந்திருப்பதாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வரணி பகுதியில் இடம்பெற்ற மைதான திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

புலம்பெயர் உறவுகள் ஊடாக இன்று பல கிராமங்கள் அபிவிருத்தி அடைந்து வருகின்றன.அவர்கள் உறவுகளை பிரிந்து வேறொரு நாட்டில் வேறு காலநிலையில் தம்மை வருத்தி உழைக்கின்றனர்.தாம் அனுபவிக்கும் சுகபோகங்களை தமது தாயக மக்களும் அனுபவிக்க வேண்டும் என்பதே புலம்பெயர் உறவுகளின் நோக்கம்.

அந்தவகையில் வரணி ஒன்றியம் பல உதவித்திட்டங்களை வழங்கி வரணி பிரதேசத்தை அபிவிருத்தி செய்து வருகின்றனர்.

எதிர்காலத்தில் அவர்கள் வரணியில் பிறக்கவுள்ள குழந்தைகளுக்கு ஒரு உதவு தொகையை வழங்கி குழந்தைப் பேற்றினை ஊக்குவிக்கவிருப்பதாக தெரிவித்துள்ளனர்.இது மிகவும் அவசியமானதொரு விடயம்.எமது சனத்தொகை வெகுவாக குறைவடைந்து வருகின்றது.

70-75 வருடங்களாக எமது உரிமைகளுக்காக போராடிக்கொண்டு இருக்கிறோம். இறுதியில் உரிமை கிடைக்கும் போது அதனை அனுபவிக்க யார் இருப்பது என்



பது அவசியமான விடயம்.

அந்தவகையில் எமது சனத்தொகையை அதிகரிக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பு.

புலம்பெயர் உறவுகள் செய்கின்ற ஊக்குவிப்புக்களை வடக்கு மாகாணசபையே செய்திருக்க வேண்டும்.இதற்கான தீர்மானங்களை அவர்கள் உருவாக்கியிருக்க வேண்டும்.

யுத்தம் மற்றும் வறுமை காரணமாக எமது பிறப்பு வீதம் குறைந்து செல்கிறது.இது எமது உரிமைப் போராட்டத்தில் பாரிய தடங்கலை ஏற்படுத்தும்.வடக்கு மாகாணசபையே சனத்தொகையை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருக்க வேண்டும்.ஆனால் இன்று காலத்தின் தேவை அறிந்து அதனை புலம்பெயர் உறவுகள் செய்கின்றனர்.

முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஐயாவின் செவ்வி ஒன்றினைப் பார்த்தேன்.அதில் அவர் நாம் மாகாணசபையில் பல நியதிச் சட்டங்களை உருவாக்கியிருக்க வேண்டும்.அவ்வாறு உருவாக்கியிருந்தால் மத்தியில் இருந்து வரக்கூடிய குடைச்சல்களை தீர்த்திருக்க முடியும் என்று அவர் அந்த செவ்வியில் கூறியிருக்கிறார்.

இதைத் தான் நாம் அன்று படிச்சு படிச்சு சொன்னோம் நியதிச் சட்டங்களை உருவாக்குங்கள் அதனூடாக எமது மக்களுக்கான செயற்பாடுகளை நாமே முன்னெடுக்க முடியும் என கூறினோம்.

நியதிச் சட்டங்களை உருவாக்காததன் விளைவினை அவர் இப்போதாவது உணர்ந்திருப்பது மிகப்பெரிய விடயம்.

எதிர்காலத்தில் வரும் வடக்கு மாகாணசபை தேர்தல் ஊடாக அமைக்கப்படும் சபை பல நியதிச் சட்டங்களை உருவாக்கி மத்திய அரசாங்கம் போடும் தடைகளை தடுத்து நிறுத்தும் என்ற நம்பிக்கை உள்ளது.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# போதைவஸ்தை முழுமையாக அடக்க பள்ளிவாசல்களினால் முழுமையாக முடியாது

## அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ் எம் சபீஸ்




(நூருல் ஹுதா உமர்)

பள்ளிவாசல் வெறும் தொழும் இடமாக மாத்திரம் அல்லாமல் அனர்த்தங்களின் போதும் மக்கள் அல்லலுறும் சந்தர்பங்களிலும் அவர்களின் நலன்களில் கவனம் செலுத்தும் இடமாக செயற்பட்டது. மாணவர்களுக்கு வழிகாட்டும் அமைப்பாக செயற்பட்டது. சமூக விரோத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஒரு இடமாக செயற்பட்டது. மாவட்டம் தாண்டிய பள்ளிவாசல் சம்மேளனங்கள் எம்முடன் சேர்ந்து இயங்கவும் எதிர்காலத்தி எம்மோடு சேர்ந்து பயணிக்கும் விருப்பத்தை ஏற்படுத்தும் முகாமாகவும் செயற்பட்டிருந்தது என அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் பெருநாள் தொழுகைக்கு முன் அப்பள்ளிவாசல் தலைவரின் சம்பிரதாய உரை இடம்பெறுவது மரபாகும் அதனடிப்படையில் பள்ளிவாசல் தலைவர் எஸ் எம் சபீஸ் அவர்களின் சம்பிரதாய உரையின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், ரமழான் மாதத்தை அடைய வைத்து அதனை முழுவதுமாக பூரணப்படுத்தி பெருநாள் தொழுகைக்கு நம் எல்லோரையும் ஒன்று சேர்த்த ரப்பில் ஆலமினுக்கு நன்றிகூரியவனாக

சுமார் 10 வருடங்களின் பின் நிம்மதியான சூழலில் நோன்பு நோற்று ஈதுல் பித்ர் பெருநாளைக்கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்துக்களை கூறிக்கொள்கின்றேன். ரமழான் மாதம் அதிகமான மக்கள் பள்ளிவாசலில் நிறைந்திருந்தனர். அதிலும் குறிப்பாக வாலிபர்கள், சிறுவர்கள் அதிகம் இபாதத்துகளில் ஈடுபட்டிருந்தனர். திக்ருகளிலும், பயான்களிலும், தொழுகையிலும் அவர்கள் அதிக நேரங்களை செலவு செய்தனர். அவர்கள் எல்லோரும் மிகநீண்ட நேரம் நடுநிசியில் நின்று இறைவனை வணங்கியிருந்தார்கள் அதற்கு உலமாக்களே சாட்சியாக இருகின்றனர். பள்ளிவாசலின் கோரிக்கையை ஏற்று இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகோதரர்கள் தாய்மார்கள் அனைவருக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன்.

எமக்கு முன் இருந்த நம்பிக்கையாளர் சபைத் தலைவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட முன்னெடுக்கப்பட்ட பள்ளிவாசலின் கட்டுமானப்பணிகளை எங்களது காலத்தில் பூர்த்திசெய்திட இறைவன் எமக்கு அருள்புரிந்தான். இப்பணிகளுக்கு இரவுபகலாக பாடுபட்ட அனைத்து நம்பிகையாளர்களுக்கும் நன்றி தெரிவித்து கொள்கின்றேன். அதிலும் குறிப்பாக உமர் லெப்பை சேர் அவர்களுக்கு விசேட நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன். கடந்த கொரானா காலங்களில்கூட கட்டுமானப்பணிகள் தொடர்ச்சியாக நடைபெற ஜமாஅத்தினரிடமிருந்து நிதி திரட்டிட உதவிய அபுசஹீத், ரோயல் அதம்லெப்பை மற்றும் மாப்பிள்ளை ஹாஜியார் போன்றோருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

இறைவன் எங்களுக்கு வழங்கிய அமானிதத்தை முறையாக பயன்படுத்தியுள்ளோம் எங்களால் மாத்திரமே அனைத்தும் செய்ய முடியும் எனும் அகங்காரத்தினை நாங்கள் முற்றாக வெறுக்கின்றோம். அதனால் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைமையிலிருந்து விடைபெற நான் விரும்புகின்றேன். மீண்டுமொரு முறை தலைவர் பதவியினை ஏற்குமாறு வேண்டிய உங்களது அன்புக்கோரிகையை என்னால் ஏற்றுகொள்ளமுடியாமைக்கு வருந்துகின்றேன்.

மேலும் ஒரே ஒரு கவலை என்னில் மீதமாகவுள்ளது. போதைவஸ்து பாவனையை முழுமையாக பள்ளிவாசல்களினால் அழிக்க முடியாது. நாங்கள் போதைவஸ்து பாவனை கொண்டவர் என அறியும் பட்சத்தில் அவர்களது திருமணங்களை எங்களால் முன்னின்று நடத்தாமல் தவிர்க்க முடியும். போதைவஸ்தில் மரணித்த ஒருதரின் ஜனாஸாவுக்கு எங்களது பள்ளிவாசல் உலமாக்களை அனுப்பாமல் தடை செய்தோம். ஆனால் போதைவஸ்தை முழுமையாக அடக்கவேண்டியவர்கள் அதிகாரத்தில் உள்ளவர்கள்தான் அது பள்ளிவாசல்களினால் முடியாது என்ற கவலையோடுதான் நாங்கள் செல்கின்றோம். எங்களுடைய நிருவாகக் காலத்தில் யாருக்கும் அநீதிகள் ஏற்படாத வண்ணம் நடந்துள்ளோம். நாங்கள் செய்த நல்ல காரியங்களின், நன்மைகளை எமது ஜமாஅத்தினருக்கு பிரித்து கொடுத்துவிடு இறைவா என்ற பிரார்த்தனையோடு தனது சம்பிரதாய உரையை நிறைவு செய்தார்.



# தமிழ் முழக்கம் பேச்சுப்போட்டி தமிழகரம் விருது விழா ௨0௨௩





















சூரிச் சிவன் கோயில் சைவத் தமிழ்ச் சங்கத்தின் பிரதான அனுசரணையில் தமிழகரம் இணைய வானொலி மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களிடையே நடாத்திய

தமிழ் முழக்கம் பேச்சுப் போட்டியின் இறுதி நிகழ்வு 23/04/2023ஆம் திகதி கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் கலாநிதி த.மேகராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

காலை 9.40 மணியளவில் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். சூரிச் சிவன் கோயில் சைவத்தமிழ்ச் சங்கத்தின் நிருவாகச் செயற்பாட்டாளரும் அன்பே சிவம் அமைப்பின் சர்வதேசப் பொறுப்பாளருமாகிய திருநாவுக்கரசு திருநாமசிவம் , கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் செ.யோகராசா, கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் கற்கைகள் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்களாகிய கலாநிதி உசாந்தி துரைசிங்கம், திரு. க.மோகனதாசன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர். மேலும் மாகாண கலாசார இணைப்பாளர் திரு. வி.குணபாலா, உதவிக்கல்விப் பணிப்பாளர்களான திரு.ந.நேச கஜேந்திரன், ஏ.எம்.முபாஸ்டீன், மாவட்ட கலாசார இணைப்பாளர் திரு.த.மலர்ச்செல்வன் ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்துகொண்டனர். மற்றும் கௌரவ அதிதிகளாக ஆசிரிய ஆலோசகர் திரு.பு.சதீஸ்குமார், தமிழ்ப்பாட வளவாளர்களான திரு.கு.சுதாகரன், திரு.பொ.மேகவண்ணன், கலாசார உத்தியோகத்தர் சு.ருபேசன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

வலய மட்டத்தில் பேச்சுப்போட்டி நடாத்தப்பட்டு 5 கல்வி வலயங்களிலிருந்தும் 25 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான இரண்டாம் கட்டப் போட்டிகள் நடாத்தப்பட்டு அவர்களிலிருந்து 5 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு இன்று அவர்களுக்கான இறுதிப்போட்டி இடம்பெற்றது. இப்போட்டியில் மட்/மட்/ சிவானந்தா தேசிய பாடசாலையின் மாணவன் திரு. ஏ.அட்சரன் முதலாமிடத்தைப் பெற்று ஐம்பதாயிரம் பணப்பரிசினையும் தமிழகரம் 2023 விருதினையும் பெற்றுக் கொண்டார்.இரண்டாம் இடத்தினையும் முப்பதாயிரம் பணப்பரிசினையும் மட்/பட்/ செட்டிபாளையம் மகா வித்தியாலய மாணவி செல்வி ச. டயனுகா பெற்றுக்கொண்டார். மூன்றாம் இடத்தினையும் அதற்கான இருபதாயிரம் ரூபாய் பணப்பரிசினையும் மட்/ மம/ காத்தான்குடி அல் அமீன் தேசிய பாடசாலையின் மாணவி மு.று.பா.றுகையா அவர்களும் நான்காம் இடத்தினையும் அதற்கான பத்தாயிரம் ரூபாய் பணப்பரிசினையும் மட்/மம/ மாக்கான் மாக்கார் தேசிய பாடசாலையின் மாணவன் அ.அதீக் அஹமட் அவர்களும் ஐந்தாம் இடத்தினையும் ஏழாயிரம் ரூபாய் பணப்பரிசினையும் மட்/ ககு/ வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய மாணவி வ.கிவானுஜா அவர்களும் பெற்றுக் கொண்டார்கள். வலய மட்டத்தில் சாதனை புரிந்த இருபது மாணவர்களுக்கான ஆறுதல் பரிசில்கள், சான்றிதழ்கள், நினைவுச் சின்னங்கள் என்பனவும் வழங்கப் பெற்றன. அத்தோடு நடனக் கலைஞர்கள், கலை இலக்கிய செயற்பாட்டாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் என்போருக்கான சான்றிதழ்களும் வழங்கப்பெற்றன. இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் தமிழகரம் இணைய வானொலி நன்றிகளைக் கூறிக்கொள்கிறது.

# அரசாங்கத்தின் காட்டுமிராண்டித்தனத்துக்கு எதிராக ஒன்றுதிரள்வோம். அரசின் கடும்போக்கை அடக்குவோம்

**கோவிந்தன் கருணாகரம்**
**பாராளுமன்ற உறுப்பினர்**

தமிழின அழிப்பினை காலங்காலமாக நிகழ்த்தி வருகின்ற பெரும்பான்மைச் சமூகம் தமிழர்களின் இருப்பையும் வாழ்வையும் கேள்விக்குறியாக்கியே வந்திருக்கிறது. அண்மைய காலங்களில் நடைபெற்று வருகின்ற அத்தனை சம்பவங்களும் இதனை மீண்டும்மீண்டும் உறுதி செய்கின்றன.

பயங்கரவாதத்தடைச் சட்டமே வேண்டாமென்கிற நிலையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை ஏற்படுத்துவதற்கு ஆட்சியாளர்கள் முனைந்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின் மூலமாக தமிழ் பேசும் மக்களின் அத்தனை உரிமைகளையும் பறித்தெடுக்கவே அரசு முடிவு செய்துள்ளது.

இனப்பிரச்சினையின் காலான முரண்பாட்டினால் உருவான யுத்தம் மௌனிக்கப்பட்டு 14 வருடங்கள் கடந்தும் தமிழர்களுடைய பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்கு அரசு தயாராக இல்லை. யுத்தம் மௌனிக்கப்பட்டு 4 ஜனாதிபதிகள் 6 பிரதமர்கள் மாறியுள்ளனர் அதே போன்றே அரசாங்கங்களும் மாறி விட்டன.

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த உள்நாட்டு யுத்தம் ஏன் என்பதற்கான கேள்வியே இப்போதைக்கு சாதாரணமானதாகிவிட்டது. நல்லிணக்கத்தை மேம்படுத்துதல், பொறுப்புக்கூறல், மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பை ஊக்குவித்தல் ஆகியவற்றை அரசாங்கம் கணக்கிலெடுப்பதாகவே தெரியவிலலை. இவ்வாறான நிலையில் நடைபெறுகின்ற அடக்குமுறைகளுக்கெதிராக தமிழ் பேசும் மக்களாகிய நாம் போராடவேண்டிய கடப்பாட்டில் உள்ளோம்.

நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு மாறாக தமிழ் மக்களுக்கெதிரான தொல்பொருள் செயலணி, இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடுகளும், பௌத்த மயமாக்கல் முயற்சிகளும் நடைபெறுகின்றன. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், இயற்கை வளங்களை சூறையாடுதல், வனவளத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் காணி பகிர்ந்தளிப்பு, காணாமலாக்கப்பட்டோர் விடயம், மனித உரிமை மீறல்கள், தொல்பொருள் ஆராய்ச்சி என்னும் போர்வையில் சிங்கள மயமாக்கல், மதவழிபாட்டுக்கு தடை விதித்தல், பௌத்த விகாரை அமைத்தல் போன்ற செயற்பாடுகள் திட்டமிட்டவாறு விரைவாகவும், சிறப்பாகவும் நடைபெறுகின்றன.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, அதனால் உருவான அரச எதிர்ப்புப் போராட்டங்கள் நாட்டையே புரட்டிப் போட்டன. ஆனாலும் எதுவும் நடைபெறாதது போலும், ஏதும் அறியாதது போலும் அரசாங்கம் மேற்கொள்ளகின்ற ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை இல்லாதொழிக்கவேண்டியது மக்களாகிய நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான போராட்டமே நாளை நடைபெறவுள்ள ஹர்த்தாலாகும். இத்தினத்தில் சந்தைகளை மூடி, கடைகளை அடைத்து போக்குவரத்து சேவைகளை நிறுத்தி ஒத்துழையுங்கள். அத்தோடு அரச அதிகாரிகள், தனியார் நிறுவனங்களின் ஊழியர்கள் பணிப் புறக்கணிப்புகளை மேற்கொண்டு ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குங்கள்.

சிறுபான்மை இனங்கள், அரசிடம் சரணாகதியடைந்து உரிமைகளைத் துறந்து, நடந்தவைகளை மறந்து நடப்பவைகளை காணாது வாழப் பழகிக்கொள்ளல் இந் நாட்டில் சிறப்பானதொரு வாழ்க்கைக்கான வழி என்பதே சிங்கள அரசுகளின் எண்ணமாக இருக்கிறது. அரசாங்கத்தின் காட்டுமிராண்டித்தனத்துக்கு எதிராக ஒன்றுதிரள்வோம். அரசின் கடும்போக்கை அடக்குவோம். நாட்டைக் குட்டிச்சுவராக்கும் மக்களது உரிமைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாடுகளைக் களைந்தெறிவோம்.







## மட்டக்களப்பு மாவட்ட செயலகம் பெருமையுடன் வழங்கும் சித்திரை வசந்தம் 2023




(கல்லடி நிருபர்)

தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் இலங்கை பொலிஸ், இலங்கை இராணுவம், மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து பெருமையுடன் நடாத்தும் சித்திரை வசந்தம் - 2023 மிகவும் கோலாகலமாக மட்டக்களப்பில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜா தலைமையில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 6.30 மணி முதல் இரவு 11.00 மணிவரை பல்வேறு பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளும் மாலை நேர இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வானது காலை 6.30 மணிக்கு காந்திப்பூங்காவில் இருந்து இருபாலாருக்குமான சைக்கில் ஓட்டமும் மரதன் ஓட்டமும், காலை 8.30 மணிக்கு முகத்துவாரத்தில் இருந்து மட்டக்களப்பு நுழைவாயில் வரையிலான தோணி ஓட்டமும்

பிற்பகல் 2 மணிக்கு வழுக்கு மரம் ஏறுதல், தலையனைச்சமர், முட்டி உடைத்தல் புதுவருட அழகன் அழகி போட்டி போன்ற சுவாரஸ்யம் நிறைந்த போட்டி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து காலை 11மணிக்கு உள்ளூர் வியாபார முயற்சியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும் அதிதிகளினால் திறந்துவைக்கப்படவுள்ளதுடன், இதில் பாரம்பரிய உணவு கூடங்கள் மற்றும் உள்ளூர் சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் கண்காட்சி மற்றும் விற்பனை கூடங்கள் என்பன இடம்பெறவுள்ளது.

மரதன் ஓட்டம் (ஆண் / பெண்), சைக்கிலோட்டம் (ஆண் / பெண்),

தோணி ஓட்டம் (ஆண்),

நீச்சல் அஞ்சல் ஓட்டம் (கலப்பு), வழுக்கு மரம் ஏறுதல் (குழு),

முட்டி உடைத்தல், தலையனை சமர்,

கயிறு இழுத்தல் (ஆண் / பெண்),

கிடுகு இழைத்தல் (பெண்),

கோலம் போடுதல் (பெண்), சைக்கிள் மெதுவோட்டம் (50 வயதுக்கு மேல் ஆண்), யானைக்கு கண் வைத்தல் (சிறுவர் சிறுமியர் 10 - 15 வயது),

சாக்கோட்டம் (10 - 15 வயது),

பெண்களுக்கான தேங்காய் துருவுதல் (துருவிலை மட்டும் கொண்டுவருதல் வேண்டும்), தேசிக்காய் சமநிலை ஓட்டம் (10 தொடக்கம் 15 வயது - தேசிக்காய் மற்றும் கரண்டி என்பன வழங்கப்படும்), ஊசிக்கு நூல் கோர்த்தல் (ஆண் / பெண்),

போத்தலில் நீர் நிரப்புதல் (10-15 வயது), மிட்டாய் ஓட்டம் (10 வயதுக்குட்பட்ட சிறார்கள்),

பலூண் உடைத்தல் (10-15 வயது),

சங்கீதக் கதிரை (பெண் உத்தியோகத்தர்கள்),

தொப்பி மாற்றுதல் (ஆண் உத்தியோகத்தர்கள்),

கயிறு இழுத்தல் - பொலிஸ் மற்றும் இராணுவம் (ஆண்)

பொலிஸ் மற்றும் மாவட்ட செயலகம் (பெண்), கிராமியப்பாடல் (35 வயதுக்கு மேற்பட்டோர்),

புத்தாண்டு அழகன், அழகி போட்டிகள் போன்றவை இடம்பெற்றதனைத் தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து மட்டுநகர் சுப்பர் சங்கீர்த் இசைக்குழு வழங்கும் அட்டகாசமான இசை நிகழ்ச்சி என பல்வேறுபட்ட சிறப்பு நிகழ்ச்சிகளுடன் மாவட்ட செயலக சித்திரை வசந்தம் நிகழ்ச்சி கோலாகலமாக இடம்பெறவுள்ளது.

போட்டிகளில் கலந்துகொண்டு பெறுமதிமிக்க பணப்பரிசில்களையும் பரிசுப்பொதிகளையும் வெல்வது மாத்திரமல்லாது எமது மாவட்ட கலைஞர்களின் இசை மழையில் நனைந்திடவும் சித்திரை வசந்தம் ஏற்பாட்டுக் குழுவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்.

'சித்திரை வசந்தம் - 2023' நிகழ்விற்கு பிரதான அனுசரணையாளர்களாக மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழகம் மற்றும் கோட்டைமுனை விளையாட்டுக்கழகம் என்பனவும், இணை அனுசரணையாளர்களாக அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக பிரமுகர்கள், சமூக மட்ட அமைப்புகள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் என்பன மாவட்ட செயலகத்துடன் கைகோர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.